**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்**

முன்னிலை : **திரு. ப. சரவணன், பி.எல்.,**

கூடுதல் மாவட்ட நீதிபதி, திண்டுக்கல்

2022–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 17–ஆம் நாள் வியாழக் கிழமை

**அசல் வழக்கு எண். 213/2022**
**CNR. No. TNDG01-002378-2022**

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் மேற்கு தாலுகா, பலக்கனூத்து கிராமம், செம்மடைப்பட்டியில் வசித்து வரும், இந்து, வியாபாரம், வயது சுமார் 55 உள்ள சுப்பிரமணியன் மகன் சேதுராமன்.

---- வாதி

**/எதிர்/**

1. திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் மேற்கு தாலுகா, பலக்கனூத்து கிராமம், செம்மடைப்பட்டியில் வசித்து வரும், இந்து, வீட்டுக்குடித்தனம், வயது சுமார் 50 உள்ள லேட்.சின்னச்சாமி மனைவி திருமதி. லதா.
2. திண்டுக்கல் மாவட்டம் , ஒட்டன்சத்திரம் கிராமம், ஓடைப்பட்டியில் வசித்து வரும் இந்து வீட்டுக்குடித்தனம், வயது சுமார் 27 உள்ள சரவணன் மனைவியும் , லேட்.சின்னச்சாமி மகளுமான அனுரேஷ்மி.
3. திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் மேற்கு தாலுகா, பலக்கனூத்து கிராமம், செம்மடைப்பட்டி வசித்து வரும், இந்து வயது சுமார் 25 உள்ள லேட். சின்னச்சாமி மகள் செல்வி. யாழினி.

..... பிரதிவாதிகள்.

தாவா தொகையான ரூ.10,52,533/–ஐயும், அசல் தொகை ரூ.8,00,000/–க்கு பிராது தேதி முதல் 12% பின்வட்டியும் மற்றும் செலவு தொகையும் சேர்த்து இறந்து போன சின்னச்சாமியின் சொத்துக்களிலிருந்து பிரதிவாதிகள், வாதிக்கு

செலுத்த வேண்டுமென உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு.

<u>மதிப்பு விவரம்</u>

| | |
|---|---|
| தாவா 1, 2 லக்க பிராமிசரி நோட்டுகளின் மொத்த கூடுதல் | ரூ.8,00,000/– |
| அதற்கு 15.10.2019 முதல் 01.06.2022 தேதி வரை 31 மாதம் 17 நாட்களுக்கு ரூ.100 க்கு 1 – வீதம் வட்டி | ரூ.2,52,533/– |
| மொத்த கூடுதல் | ரூ.10,52,533/– |

அதற்கு தமிழ்நாடு நீதிமன்றக் முத்திரை சட்டப் பிரிவு 22 ன்படி நீதிமன்ற கட்டணம் ரூ.31,576.00 வாதி செலுத்தியுள்ளார்.

வழக்குமூலம் எழுந்த நாள் – 15.10.2019, 12.12.2020, 12.03.2022, 15.03.2022, 19.04.2022, 25.04.2022–பலக்கனூத்து கிராமம், செம்மடைப்பட்டி, திண்டுக்கல் மேற்கு வட்டம், திண்டுக்கல் மாவட்டம்.

தாவா தாக்கல் செய்யப்பட்ட நாள்–02.06.2022.

தாவா கோப்பில் எடுக்கப்பட்ட நாள்– 02.06.2022.

<u>தீர்ப்பாணை</u>

இவ்வழக்கானது இன்று 14.11.2022– ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன் விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர்கள் திரு.R.குப்புசாமி மற்றும் திரு.T.முத்தமிழ்செல்வன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் அழைத்து ஆஜராகாததால் தோன்றாத் தரப்பினராக்கப்பட்டும், வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டும், ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

1. **பிராது தொகை ரூ.10,52,533/–ஐயும், அசல் தொகை ரூ.8,00,000/–க்கு பிராது தேதி முதல் தீர்ப்பு தேதி வரை 9% பின்வட்டியும், தீர்ப்பு தேதி முதல் தொகை வசூலாகும் வரை 6% பின்வட்டியும் வழக்கின் செலவு**

**தொகையுடன் வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.**

2. **சின்னச்சாமியின் சொத்துக்களிலிருந்து பிரதிவாதிகள் , வாதிக்கு செலுத்த உத்தரவிட்டு தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.**

3. **வழக்கின் செலவு தொகை ரூ.40,302/–ஐ வாதிக்கு பிரதிவாதி செலுத்த வேண்டுமெனவும் கட்டளையிடப்படுகிறது.**

**<u>செலவு தொகை விவரம்</u>**

| வ.எண். | செலவு தொகை விபரம் | வாதிகளுக்கு ரூ. பை. |
|---|---|---|
| 1. | வழக்குரைக்கான வில்லை | **31576.00** |
| 2. | வக்காலத்திற்கான வில்லை | **10.00** |
| 3. | வழக்கறிஞர் கட்டணம் சீனியர்<br>ஜுனியர் | **6537.00**<br>**2179.00** |
| | **மொத்தம்** | **40,302/–** |

2022–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 17–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்பட்டது.

P SARAVANAN
Digitally signed by P SARAVANAN
Date: 2022.11.30 10:41:16 +0530

**கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**திண்டுக்கல்.**